2026 ஜூலை மாதம் 02– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 11/2026

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 (LW1) – ஸ்ரீதர் |
| தகப்பனார் பெயர்: | கருப்பையா |
| ஊர்: | அல்லிநகரம் |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | முதல்நிலை காவலர், அல்லிநகரம் காவல்நிலையம் |
| வயது : | 37 |

02.07.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு, திரு.ஜி.முத்துக்குமார், தலைமை காவலர் எண்.803 அவர்களால் அடையாளம் காணப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், தேனி தாலுகா, அல்லிநகரம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 09.04.2024ம் தேதி இரகசிய தகவாளி மூலம் அன்னஞ்சி அருகில் காளியம்மன் கோவில் அருகில் கஞ்சா புழக்கம் இருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்பேரில் மதுவிலக்கு ஆய்வாளர் திருமதி.செல்வக்குமாரி அவர்களிடம் தெரிவித்து, அனுமதிப்பெற்று, நானும்,

காவல்நிலையத்திலிருந்து CIU காவலர் திரு.முத்துக்குமரன் ஆகியோர்கள் இரவு சுமார் 9 மணியளவில் அன்னஞ்சி காளியம்மன் கோவில் அருகில் நாங்கள் இருவரும் சென்று, முத்துக்குமரன் அவர்களின் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, மேலும் ஆய்வாளர் அவர்களின் அனுமதிப்பெற்று, தலைமை காவலர் திரு.அசோக், காவலர் எண்.1666 அவருடன் காவலர் முத்துக்குமரன், காவலர் முத்துச்செல்வம் ஆகியோர்கள் அல்லிநகர சரகத்திற்குட்பட்ட அன்னஞ்சி காளியம்மன் கோவில் பின்புறம் உள்ள சுடுகாட்டிற்கு சென்றோம்.

2. சுமார் 9.45 மணியளவில் பின்னர் பெயர், விலாசம் தெரிந்து கொண்ட முருகன், அசார், காளி, சசி ஆகியோர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களின் அருகே TN 67 AR 8003 என்ற பதிவெண்கொண்ட பஜாஜ் டிஸ்கவர் மற்றும் TN 60 J 2390 என்ற பதிவெண்கொண்ட TVS Star City என்ற இருசக்கர வாகனங்கள் இருந்தன. மேற்படி இரகசிய தகவாளி அடையாளம் காட்டி நாங்கள் நால்வரும் அவர்களை பிடிக்க சென்றபோது அங்கிருந்த அசாரும், முருகனும் தப்பிச் சென்றனர். ஆஜர் எதிரிகள் 1வது எதிரி காளி மற்றும் 2வது எதிரி சசியை விசாரித்தப்போது முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தனர்.

3. அவர் அருகிலிருந்த வாகனமான TN 67 AR 8003 என்ற பதிவெண்கொண்ட பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தின் முன்பகுதி டேங்க் கவரில் காக்கி கவர் சுற்றப்பட்ட பூ மற்றும் விதையுடன் கூடிய கஞ்சா இருந்தது. கஞ்சா இருந்த இருசக்கர வாகனம் Start ஆகாததால் அதன் அருகிலிருந்த TN 60 J 2390 என்ற பதிவெண்கொண்ட TVS Star City என்ற வாகனத்தில் கஞ்சாவை முன்பக்கமாக வைத்து எதிரி சசி என்பவரை பின்னால் அமர வைத்துக்கொண்டு, என்னுடன் வந்த தலைமை காவலர் அசோக், காளி என்பவரை தனது இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு, சுடுகாட்டில் இருந்து காளியம்மன் கோவில் அருகில் வரும்போது, சசி மற்றும் காளி ஆகிய இருவரும் தப்பியோட முயற்சித்தனர்.

4. வாகனத்தை நிறுத்தி அவர்களை பிடிக்க முயற்சித்தப்போது, அங்கிருந்த பின்னர் பெயர், விலாசம் தெரிந்த ஆஜர் எதிரிகள் அஜித், சுபாஷ், மனோஜ், முத்துராஜ் ஆகியோருடன் சுமார் 20 நபர்கள் சேர்ந்து எங்களுடன் வாக்குவாதம் செய்தனர். நாங்கள் மதுவிலக்கு காவலர்கள் என்று கூறியும், கஞ்சா பிடித்த சம்பவத்தை கூறியும், காதில் கேளாமல், எங்களை அசிங்கமாக பேசி, தேவிடியா பயல்களா என்று அசிங்கமாக திட்டினர். போலீஸ் என்றும் பாராமல் அங்கிருந்த மேற்படி நபர்கள் எங்கள் ஏரியாவிற்குள் வரக்கூடாது என்றும், எங்கள் ஏரியாவிற்குள் எந்த போலீஸ் வந்தாலும் வெட்டாமல் விடமாட்டோம் என்றும், மேற்படி எதிரிகள் என்னையும், முத்துக்குமரனையும் ஒன்று கூடி கையால் மாறி மாறி அடித்தனர்.

5. எங்களை அடித்ததில் எனக்கும், முத்துக்குமரனுக்கும் கன்னத்தில் மற்றும் கழுத்தில் காயம் ஏற்பட்டது. அங்கிருந்த காவலர்கள் மற்றும் சுற்றியிருந்த நபர்கள் விலக்கிவிடாமல் இருந்திருந்தால் கழுத்தை நெறித்து, கொன்றிருப்பார்கள். எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டோம். எங்களை அல்லிநகரம் சார்பு ஆய்வாளர் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு வந்து விசாரித்தப்போது, நடந்த விபரங்களை கூறினோம்.

6. எங்களை பணி செய்ய விடாமலும், அசிங்கமாக பேசியும், ஆபாசமாக திட்டியும், கொலை செய்யும் நோக்கத்துடன் கொலை மிரட்டல் விடுத்து தாக்கிய எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு எழுத்துமூல புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் முத்துக்குமரன் என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார்.

<u>4 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

7. என்னை போலீசார் எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 10.04.2024 ம் தேதி காவல் ஆய்வாளர் என்னை அவரது அலுவலக

அறையில் வைத்து விசாரித்தார். இரகசிய தகவல் எதன் மூலம் வந்தது என்றால் நேரடியாக வந்தது. இரகசிய தகவல் உயரதிகாரிகளுக்கு கொடுப்பார்களா அல்லது எங்களுக்கு கொடுப்பார்களா என்றால் நாங்கள் களத்தில் வேலை செய்வதால் எங்களுக்கு கொடுப்பார்கள். இரகசிய தகவல் எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால் 08.04.2024 ம் தேதி மதியம் 12 மணிக்கு கிடைத்தது.

8. காவல் ஆய்வாளர் செல்வக்குமாரிக்கு இரகசிய தகவல் விபரத்தை சொன்னேன் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அன்னஞ்சி, சுடுகாட்டில் பார்த்த காளிராஜ், அசார், முருகன், சசி ஆகியோர்களை சம்பவத்திற்கு முன்னர் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்களின் பெயர்களை கேட்டு தெரிந்து கொண்டேன் என்று எப்போது பெயர் தெரிந்து கொண்டேன் என்றால் மருத்துவமனையில் வைத்து தெரிந்து கொண்டேன். யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்றால் எனக்கு தகவல் சொன்னவர்கள் மூலம் தெரிந்து கொண்டேன். அன்னஞ்சி, சுடுகாடு இருட்டான பகுதி என்றால் சரிதான். இருட்டான பகுதியில் தெரியாத நபர்களை அடையாளம் கண்டுபிடிப்பது கடினம் என்றால் சரிதான்.

9. அதேபோல் மேற்சொன்ன நபர்கள் எவ்வளவு கஞ்சா வைத்திருந்தார்கள் என்றால் காக்கி கவரால் சுற்றப்பட்ட பொட்டலத்தில் வைத்திருந்தார்கள். எத்தனை பொட்டலங்கள் என்றால் ஒரே ஒரு பொட்டலம் ஆகும். எனது புகாரில் காக்கி கவர் சுற்றப்பட்ட கவரில் ஒரு பொட்டலம் கஞ்சா இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு புகாரில் சொல்லாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் நானும், முத்துக்குமரனும் மேற்படி நபர்களை பிடிக்க சென்றோம் என்றால் சரிதான்.

10. 4 வது எதிரி அஜித் (எ) தாமோதர சுபாஷ் என்பவரை சம்பவத்திற்கு முன்பு தெரியாது என்றால் சரிதான். 4 வது எதிரியின் பெயரை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் எனக்கு தகவல் சொன்னவர் மூலம் தெரிந்து

கொண்டேன். புகாரில் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு மேலும், அடையாளம் தெரியாத 20 நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 20 நபர்களின் பெயர்களை ஆய்வாளர் என்னை விசாரித்தப்போது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு இரகசிய தகவல் கொடுத்த தகவாளியிடம் மேற்படி 20 நபர்களின் பெயர்களை கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

11. 4 வது எதிரி மற்றும் மற்ற எதிரிகள் எங்களை அடிக்கும்போது எங்களுடன் வந்த மற்ற காவலர்கள் விலக்கிவிட்டார்கள் என்று புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், மற்ற காவலர்கள் யார் என்றால் தலைமை காவலர் அசோக் குமார், முத்துக்குமரன் ஆகியோர்கள் ஆவார்கள். அசோக் குமார் என்னுடன் வந்தார் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எங்களை கொலை செய்யும் நோக்கத்துடன் இத்தோடு செத்து தொலைங்கடா என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், யார் சொன்னார் என்றால் கூட்டத்தில் இருந்த அனைவரும் சொன்னார்கள். குறிப்பாக யார் சொன்னார்கள் என்றால் தெரியாது.

12. இனிமேல் எவனாவது எங்கள் ஊருக்குள் வந்தால் வெட்டி கொல்லாமல் விடமாட்டோம் என்று யார் சொன்னார்கள் என்றால் சுபாஷ், அஜித், மனோஜ் ஆகியோர்கள் சொன்னார்கள். எல்லோரும் ஒரே நேரத்தில் சொன்னார்கள் என்றால் சரிதான். என்னை போலீசார் மருத்துவமனையில் எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் காலை 11 மணி இருக்கும். யார் என்னிடம் வந்து வாக்குமூலம் பெற்றார் என்றால் சார்பு ஆய்வாளர், பெயர் தற்போது ஞாபகமில்லை அவர்கள் பெற்றார். அ.சா.ஆ.1 புகாரா அல்லது வாக்குமூலமா என்றால் புகார் வாக்குமூலம் ஆகும். புகாரை எழுதும்போது எனக்கு உடல்நிலை நல்லநிலையில் இருந்தது என்றால் சரியல்ல, முகத்திலும், கழுத்திலும் காயம் இருந்தது, சிகிச்சையில் இருந்தபோது புகாரை எழுதிக்கொடுத்தேன்.

13. முதல் தகவல் அறிக்கையில் காவல்நிலையத்தில் தகவல் கிடைத்த நேரம் 16.00 மணி 10.04.2024 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளரை தான் கேட்க வேண்டும். மருத்துவமனையில் எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்றால் சுமார் இரவு 11.00 மணி இருக்கும். மருத்துவமனையில் 12.34 மணிக்கு அனுமதிக்கப்பட்டதாக விபத்து பதிவேட்டில் உள்ளது என்றால் மருத்துவமனைக்கு சென்று, வெளிநோயாளி சீட்டு பெற்று, மருத்துவரை பார்த்தப்போது குறிப்பிடப்பட்ட நேரம் 12.30 இருக்கும். பொதுவாக மருத்துவமனையில் விபத்தோ, சண்டையின்போதோ அனுமதிக்கப்படும்போது அனுமதிக்கப்படும் நேரம் தான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான்.

14. என்னை கழுத்தை நெறித்து, அடித்தார்கள் என்றும், வழிப்போக்கு ஆட்டோவில் ஏற்றிவிட்டதாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல. மருத்துமனையில் அனுமதிக்கப்படும்போது, மருத்துவரிடம் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு மற்றும் 20 நபர்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 09.04.2024ம் தேதியன்று அன்னஞ்சி கிராமத்தில் ஊர் திருவிழா என்றால் சரிதான். ஊர் திருவிழாவிற்கு நான் பாதுகாப்பிற்கு சென்றேன் என்றால் சரியல்ல.

15. நான் அன்றைய தேதியில் நான் திருவிழாவிற்கு சென்றேன் என்றால் இல்லை, பாதுகாப்பு பணியில் மதுவிலக்கு காவலர்கள் ஈடுபட மாட்டார்கள். காவல் சீருடையில் செல்லவில்லை என்றால் சரிதான். காவல் சீருடையில் இல்லாதபோது, என்னை பார்க்கும்போது நான் காவலர் என்று அடையாளம் காணமுடியாது என்றால் சரிதான். அன்றைய தேதியில் நான் மது அருந்தியிருந்தேன் என்றாலும், பிரச்சனை செய்தபோது, ஊர் மக்கள் தடுத்ததால் நான் காவலர் என்று சொன்னதால் அல்லிநகரம் காவல்நிலையத்திற்கு தகவல்

சொல்லி என்னை அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் எனக்கு அவமானம் ஏற்பட்டதாக நான் எண்ணிக்கொண்டு, மருத்துவமனைக்கு சென்று பெற்றதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

16. அதன் பின்னிட்டு அன்னஞ்சி இளைஞர் நற்பணி மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரையும் இந்த வழக்கில் எதிரிகளாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 09.04.2024 ம் தேதியில் 4 வது எதிரிக்கு க.விலக்கு அரசு மருத்துமனையில் பெண்குழந்தை பிறந்திருந்ததால் அவர் மருத்துமனையில் இருந்தார் என்றால் சரியல்ல. 4 வது எதிரி அன்னஞ்சி கிராமத்தில் சம்பவத்தன்று இல்லை என்றாலும், அவர் என்னை அசிங்கமாக பேசி தாக்கவில்லை என்றால் சரியல்ல. வீட்டில் இருந்த நபர்களை அல்லிநகரம் போலீசார் அழைத்து வந்து, பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து, கைது செய்தார்கள் என்றால் சரியல்ல.

17. எனக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சிறிய காயங்கள் என்று மருத்துவர் சான்று வழங்கியுள்ளார் என்றால் மருத்துவர் கொடுத்த சான்று பற்றி எனக்கு தெரியாது. நான் காவல்துறையில் பணிபுரிவதால் அல்லிநகரம் காவல்துறையினர் எனக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளனர் என்றால் சரியல்ல.

**1 முதல் 3, 5 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1 முதல் 3, 5 முதல் 7 எதிரிகள் தரப்பிற்கு போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் 1 முதல் 3, 5 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லபட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.07.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.02 18:10:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
02.07.2026